கலாசிந்தாமணி

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு "

—திருக்குறள்

புத்தகம் 3	ஸ்ரீ காளயுக்தி ௵ சித்திரை மீ ஏப்ரல் மீ 1918	சஞ்சிகை 7

கடவுள் வணக்கம்

கார்கெழுகடல்களும்மலைகளுமா யேர்கெழுமுலகமுமாகிமுத
லார்களுமறிவருநிலையினையாய்ச் சீர்கெழுநான்மறையானவனே
ஆண்டாயுன்னைக்காண்பதோ ரருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே.

—நாலாயிர பிரபந்தம்.

விண்ணுக்குள் வெளியிருண் மாற்றி - அதில்
வேதாந்த மூலவிளக்கினை யேற்றிக்
கண்ணுக்குண் மணியாகத் தோற்றி - வருங்
காரண மான கடவுளைப் போற்றி

—மஸ்தான் பாடல்.

கடலெத்தனை மலையெத்தனை யத்தனை கன்மமதற்
குடலெத்தனை யத்தனை கடனுண்மண லொக்குமிந்தச்
சடலத்தை நான்விடு முன்னே யுனைவந்து சாரவிருட்
படலத்தைமாற்றப் படாதோ நிறைந்த பராபரமே.

—தாயுமானவர்.

1918ஸ்ல எப்ரல் – மேமீ

காளயுக்தி ஸ்ல சித்திரை மீ

கே.	குரு	ர. பு.	
ச.	எப்ரலீ 15உ க்குராசி சக்கரம்.		சுக்.
கு			
			ரா.

உத்தராயணம் வசந்தருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092.	கலியுகம் 5(19	ஹிஜரி 1335

யோகம்.	இங்கிமீ	தமிழ மீ.	வாரம்	திதி, நக்ஷத்திரம், முதலியன.
சி	13	1	சனி	திரி 54-36, பர 12-44, * கிரு. ரா 10-33, த.
அ	14	2	ஞா	சௌ 51-38, கிரு 10-11, ரா 18-12 [வருஷ
சி	15	3	திங	பஞ் 48-53, ரோக 8-30, தி 22-20.
நா	16	4	செவ	ஷஷ் 47-16, மிரு 7-46, தி 28-57.
அ	17	5	புத	ஸப் 46-52, திருவா 8-19. ரா 8-12.
சி	18	6	வி	அஷ் 47-43 புனர் 10-2, ரா 0-2.
சி	19	7	வெ	நவ 49-52,பூசம் 13-1,ரா 16-1,ஸ்ரீராமநவமி.
ம	20	8	சனி	தச 53-8, ஆயி 17-9, ரா 18-41. (ஏகாதசி.
அ	21	9	ஞா	ஏகா 57-24, மக 22-21, ரா 13-15,ஸ்மார்த-
ம	22	10	திங	துவா 60-0, பூரம் 28-21,ரா 17-9, வைஷ்ண
ம	23	11	செ	துவா 2-31, உத 34-50 ரா 26-58. (ஏகாதசி
ம	24	12	புத	திர 7-43, ஹஸ் 41-25
சி	25	13	வியா	சதுர் 12-45, சித் 47-39 தி 3-25,
அ	26	14	வெ	○ பௌ 17-10, சுவா 53-9, தி 2-56.
சி	27	15	சனி	பிர 20 28, விசா 57-42, தி 8-13.
நா	28	16	ஞா	துவி 23-10, அனு 60-0, தி 8-13.
அ	29	17	திங்	திரி :4-24, அனு 0 51.
ம	30	18	செ	சௌ 24-17, கேட் 3-0 தி 23-10,ரா 28-15.
சி	1	19	புத	பஞ் 22-26 மூல 3-42, தி 27-35.
உ	2	20	வி	ஷஷ் 20-26, பூரா 3-25, தி 22-54.
ம	3	21	வெ	ஸப் 1˙-52, உத் 1-54, திருவோ 57-51, தி-
சி	4	22	சனி	அஷ் 12-29. அவி 56-38, தி 9-14. (11-51.
சி	5	23	ஞா	நவ 7-22, சத 52-56, தி 13-31 (தசி.
சி	6	24	திங்	த● 2-45, ஏகா 53-4,பூரட் 53-4, ஸ்மா ஏகா
ம	7	25	செ	துவா 49-36, உத்தி 44-42, தி 11-33, வை.
சி	8	26	புத	திர 43-31, ரேவ 40-34, தி 12-38 (ஏகா
ம	9	27	வியா	சதுர் 37-44, அசு 36-43,தி 27-21, ரா 27-42
சி	10	28	வெ	● அமா 31-41, பர 33-20, அமாவாசைவிர
சி	11	29	சனி	பிர 27-48, * கிரு 30-38, தி 1-9. (தம்
அ	12	30	ஞா	துவி 23-59, ரோ 28-45, தி 9-22,ரா 10-46.
	13	3	திங்	திரி 21-7, மிரு 27-51, ரா 17-7.

1918-மேமீ

சூரியன்

(164-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு சூரியனிடத்தில் காணும் சில புள்ளிகளால், சூரியன் பம்பரத்தைப்போல பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டது. அப்புள்ளிகளில் தோன்றவும் மறையவும் செய்கிறதை வைத்துச்சூரியன் நிலையில் இல்லையென்றும் சுற்றிக்கொண்டிருக்கிறதென்றும் கண்டார்கள். அப்புள்ளிகளே சூரியனுடைய மேல் பாகத்திலுள்ள பள்ளங்களாகும். சில சமயங்களில் ஒருமணி நேரத்திற்கூட மாறுதல காணப்படுகிறது. ஒருகாலத்தில் ஒருபுள்ளியும் காணப்படாமலிருப்பதுண்டு. மற்றொரு காலத்தில் எக்காலத்தைப் பார்க்கிலும் அதிக புள்ளிகள் காணப்படுவதுமுண்டு. ஒருபுள்ளியும் தோன்றாத காலங்களுக்கும் அதிக புள்ளிகள் தோன்றும் காலங்களுக்கும் இடையே உள்ளகாலம் சமமாகும். அதுவருடம் 11-என்று வானசாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சூரியனிற் கருப்புப் புள்ளிகள் அதிகமாக உண்டாகும் போதெல்லாம் பூமியில் பிரமாதங்கள் உண்டாகிறது அனுபவ ஸித்த மாகக் காணப் பட்டிருக்கிறது. இக்காரணங்களைக்கொண்டே, மற்றக்கிரகங்களும் பாதிக்கப் படலாமென்பதை நிச்சய மாகச் சொல்லலாம்.

புள்ளிகள் தோன்றும் இடங்கள் பிரகாச மில்லாதவையாகும் ஆதலின் சூரியன் புள்ளிகளில்லாத காலத்தில், புள்ளிகளுள்ள காலத்தைப் பார்க்கிலும் அதிகமாகப் பிரகாசிக்கும் சூரியன் ஒருகாலத்தில் அதிக பிரகாசமும் மற்றொரு காலததில் குறைந்த பிரகாசமும் உடையதாக இருக்கிறது. அது பற்றி சூரியன் வானத்தில் வெகு தொலையில் தோன்றும் (மாறுதலையும் நக்ஷத்திரங்களைப்போல) ஒரு நக்ஷத்திரமே. தவிர ஒளி குறைந்தது மாகும் எல்லா நக்ஷத்திரங்களிலும் சூரியன் நமக்கு மிகவும சமீபத்திலிருப்பதாற் பெரிதாகவும், அதிக பிரகாசமாகவும் தோன்றுகிறது. சூரியனுடைய ஆக்ருதி, பிரகாசம் ஆகிய இவற்றைக் காட்டிலும் அநேக மடங்கு அதிக வெளிச்சமும், ஆக்ருதியும் உடைய பல நக்ஷத்திரங்களுள. உதாரணமாக:— "ஆல் பாலிரே" நக்ஷத்திரம் சூரியனிருக்கும் தூரத்தைப்பார்க்கிலும் எத்தனையோஇலக்ஷம் மட

ங்கு அதிக தூரத்திலிருப்பதனுல், அதன் பிரகாசத்தை நாம் அறியக்கூடவில்லை. "ஆல்பாஸிரே" நக்ஷத்திரத்தைக் காட்டிலும் சூரியன் மிகப்பிரகாசம் குறைந்ததே. "ஸிரியஸ்" என்னும் நக்ஷத்திரம் சூரியனைப் பார்க்கிலும் 3,000-மடங்கு அதிகமாகப் பிரகாசிப்பதோடு, 300, சூரியன்களுடைய ஆக்ருதிக்குச்சமமாகும்.

சூரியன் என்கிற ஸமீப நக்ஷத்திரமான உஷ்ண கிரகத்தைப் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், குரு, சனி முதலிய அநேக குளிர்ந்த கிரகங்கள் சுற்றி வருவதே "ஆதித்யமண்டல"மாகும்.

சூரியன் ஒரு நக்ஷத்திரமே யாதலால் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரிய னென்றும், அவை ஒவ்வொன்றையும், இச்சூரியனைச் சுற்றிவருவது போல பல கிரகங்கள் சுற்றி வருமென்றும் அவற்றிற் கெல்லாம் சூரியனைப் போலவே அவை ஒவ்வொன்றும் ஒளி, உஷ்ணம் முதலியன கொடுத்து, இயக்கிக் காப்பாற்றி வருகின்றன வென்றுமுள்ள ஓர் பேருண்மை ஊகிக்கப் பொதிந்து கிடப்பதை யாவரும் நன்கறிவிராகளாக!

நமது கண்ணுக்குப் படுகிற சூரிய பிம்பம் வட்டமாகவும் பிரகாச மாகவும் இருந்தாலும், உஷ்ண ஆவிகள் சூழ்ந்து அழுத்தமாகவும் நெருக்கமாகவும் அடர்த்தியான பாகம் மட்டுமே வெளிச்சமாகவும் வட்டமாகவும் தோன்றுகிறது. யாவும் நம் கண்பார்வைக்குத் தோன்றவில்லை. அது எதுபோல வெனில் ஒரு விளக்கு எரியும்போது அதன் ஜ்வாலை சொருழுந்து விட்டு எரிகிறபாகம் மட்டும் கண்ணுக்குச் சுடராகக் காணப்படுகிறது. அச்சுடரைச்சுற்றி உஷ்ண ஆவி கொஞ்சதூரம் சுற்றிலும் கண்ணுக்குப் படாமலிருந்து கொண்டிருக்கும். இப்படியே ஒரு அடுப்பு எரிகிறபோதும், வெகுதூரத்தில் எரிகிற காவாய்த்தீ, மலைத்தீ, முதலிய இவைபோன்றவைகளிலும் பார்க்கலாம். அது போலவே ஒன்பது கோடியே இருபது லக்ஷம் மயிலுக்கப்பால் சூரியன் ஒரே தீயாக எரிவதில் அடர்த்தியான பாகம் மட்டும் நம்முடைய கண்ணுக்கு வட்டமாக ஜ்வாலை தோன்றுகிறது.

சூரிய பிம்பத்தைச் சுற்றிலும் நெருக்கமின்றிக் குறைந்த அடர்த்தியுள்ள பிரகாச உஷ்ண ஆவிகள் வெகுதூரமளவும் நாலாபக்கமும் பரவியிருக்கின்றன சூரிய வெளிச்சமுள்ள பகற் காலத்தில் எப்படி நக்ஷத்திரங்களைப் பார்க்க முடியாதோ,

அது போலவே சூரியன் பூர்ணமாகப் பிரகாசிக்கும் வேளையில் அதின் சுற்றிலும் பரவியுள்ள உஷ்ண ஆவியின் வெளிச்சத்தைப் பார்க்கமுடியாது. ஆனால் சூரிய பிம்பம் முழுக்கிரணத்தினால் பகற்காலத்தில் வெளிச்சம் மங்கித்தோன்றுங் காலங்களிற் நக்ஷத்திரங்களின் வெளிச்சந் தெரிவதுபோலச் சூரிய பிம்பத்தைச் சுற்றிலும் பரவியிருக்கிற உஷ்ண ஆவிகளின் வெளிச்சத்தைச் சோதிப்பிரபைபோல மறைந்திருக்கிற சூரியனைச் சுற்றிலும் காணலாம். இப்படி முழுக்கிரஹண காலத்திற் காணப்படும், ஜோதிர்மயமான சுற்றுவெளிச்சம் பற்பல வர்ணங்களுடன் தோன்றும். சூரிய பிம்பத்திற் கடுத்தாற்போல மிகவெளிச்சமுள்ள தாகவும், போகப்போக அந்த வெளிச்சம் குறைந்தும் காணப்படும்.

லஸ்தர்கள், சாண்டலியர்களில் தொங்கும் வஸ்தர் கல்லுகளில் பட்டுவிழும் வெளிச்சங்களில் அநேக வர்ணங்களைப் பார்ப்பதுபோல, சூரிய கிரணத்தை ( ) "ஸ்பெக்டிரஸ்கோப்" என்னும் (இ)யந்திரத்தின் வழியாகப் பரிசோதித்துபார்ப்பதினால் சூரியனில் அநேக உலோகங்கள் எரிந்து கொண்டு உருகிய ஸ்திதியில் ஆவியாகிக் கொண்டிருக்கிறதாக வெளியாகிறது. அந்த (இ)யந்திரத்தினால் பரிசோதித்துப்பார்க்கப்படும் சூரிய கிரணத்தில் தோன்றும் வர்ணங்களிலிருந்து எந்த வர்ணம் எந்த உலோகம் உருகினால் தட்டான் பட்டரையில் ஆவி வர்ணந்தோன்றுகிறதோ, அதற்குச் சமமான வர்ணத்தைக்கொண்டு சூரியனில் அந்தந்த உலோகம் உருகி ஆவியாகிக்கொண்டு வருகிறதென்று ஊகித்துச் சொல்லப்படுகிறது.

(தொடரும்)

கோ. அரங்கசாமி அய்யங்கார்,
ஸ்கூல் மாஸ்டர், செம்போடை.

மூக்குக்கும் கண்களுக்கும் மூண்ட சண்டை.

ஒரோ ஒரு சமயத்தில், மூக்குக் கண்ணாடி என்னுடையது உன்னுடைய தென்று, மூக்குக்கும் கண்களுக்கும் தீராத சண்டை மூண்டது. இந்த விவாதத்தைச் சரிவர விசாரித்து நியாயத்தைத் தீர்மானிப்பதற்காக, மிக்க கேள்வி இயற்கையுள்ள காதுகளை நியாயாதி பதிகளாகவும் அதிக சமர்த்தும் மகா வாசாலமும்வாய்ந்த நாக்கை வக்கீலாகவும் அவை கோறிக்கொண்டன.

கோரிய பலனைப்பயவாது இன்னலே விளைக்கு மென்பது மேற் கூறிய சரிதத்தால் தெளியக் கிடக்கின்றது.

தான் செய்யப்புகுங் காரியத்தை நன்கு சீர்தூக்கிப் பாராமலும். அக்காரியத்தால் தான் இறுதியில் அடைய விருக்கும் அபாயத்தை யுன்னுமலும், ஓர்வினை செய்யத்தொடங்கித் தன் னுலியன்ற மட்டில் முயற்சிக்கின்ற ஒருவனுடைய ஊக்கம் பைத்தியம் அல்லது அறிவீனம் என்றே சொல்லவேண்டும். அல்லாமலும் நம்முன்னோர் சென்ற முறை பற்றி ஓர் தொழிலைக் கைக்கொண்டு அத்தொழிலில் நம்ஊக்கத்தைச் செலுத்துதல் நன்று. ஆகவே காலம், இடம், பொருள், தன்னியல்பு முதலியவைகளை நன் காராய்ந்து வினை செய்யத் தொடங்கி அவ்வினைக்கட் செலுத்திய ஊக்கமே பயனளிக்கும் பான்மையுடையது. இவைகளை நன்காராயாது பாராட்டிய ஊக்கம் விழலுக்கிறைத்த நீரேயாம்.

யாம் இதுகாறும்கூறியவாற்ருல், ஊக்கமுடைமை யானது. எக்காரியத்தையும் கை கூட்டி வைக்கவல்ல ஓர் நற்கருவியே யாயினும், தீநெறி யொழித்துத் தூய்நெறிக்கட் செலுத்திய ஊக்கமே பயனளிக்கு மென்றும், மேலும் காலம், இடம்பொருள் முதலியவற்றை நன் காராய்ந்த பின்னரே ஓர்வினையின்கண் ஊக்கம் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு நன்காராயாது செலுத்திய ஊக்கம் பயனளியா தொழியு மென்றும் ஒருவாறு கூறி முடித்தாம்.

சேந்தமிழ்ச்சிறுவன்,

கூத்தப்பாக்கம்.

குக்கலும், நீழலும்

ஒரு நாய் இறைச்சித்துணி யொன்றை வாயிற் கடித்துக் கொண்டு, ஓராறுதாண்டிச் சென்று கொண்டிருந்தது. ஆற்றுத் தண்ணியில் தன்னது நீழலைக்கண்ணுற்று, வேற்று நாயொன்று பெருந்துண்டத்தைக் கௌவிக் கொண்டு போகிறதென்று மயக்கமுற்று, அதனுடன் போராடி அந்தப்புலால் கண்டத்தையும் பிடுங்கிக் கொள்ளக் குரைக்கவே, தனது வாயிலுள்ள மாமிசம் நீரில் விழுந்து காணுமற்போய்விட்டது. அப்புறம் அந்த நாயானது தனது புத்தி யீனத்தை வெறுத்துத் தூற்றிக் கொண்டு, ஊளையிட்டழுது கொண்டு போயது.

நாம் ஒழுகவேண்டிய நெறிகள்

(195-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேமாதிரி மந்திமரும்,—

"புறங்குன்றி கண்டனையரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியாருடைத்து" (குறள்)

என்பதுபோல வேடத்தால் மாத்திரம் செம்மையுடையரேனும் குன்றுமணியின் மூக்கைப்போல மனமிருளாமல் நன்னெறியைக் கடைப்பிடிப்பார்களாக

தவம்.

மனம் பொறிவழியே போகாமல் நிற்கையின் பொருட்டு விரதங்களினாலே உண்டி சுருங்குதல் முதலான செய்கைகளை மேற்கொண்டு அவைகளால் தம்முயிருக்கு வருந்துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களைக் காப்பாற்றுவதே தவமாகும். உண்டிசுருங்கல் முதலான விரதங்களை சதா அநுட்டிப்பது இல்லறவாழ்க்கைக்குரி யாருக்குச் சாத்தியமாகாதாகையால் அது தவசிரேஷ்டர்கட்கே யுரியதெனினும், தவத்தை இல்லறவாழ்விலிருப்பார் எதுவரையின் பின்பற்றக்கூடுமோ அதை மாத்திரம் நாம் ஈண்டு கூறுவதே நம்மைப் போன்றாருக்குப் பயன்தருமாகையால், இல்லறவாசிகளுடைய தவத்தைப்பற்றிக்கூறுதும்.

அநாதிமல பெத்தர்களாகிய நாம் விரும்பிய நலம்பலவும் அநாதி மலமுத்தசித்துருவாய் கருணையே திருமேனியாக வுடைய பரம்பொருளினருளால் எய்தல் கூடும் என்பது சகல சாஸ்திரப் பிரமாணமாதலின், அவ்வருள்பெற்று நற்கதி கண்ணுற்று ஆனந்தப் பேறடைவதே இம்மானுடப்பிறப்பின் பயனும். ஆகவே, செய்வத்திருவருள் பெறற்குரிய வழிகளைத் தேடுவது மானிடர் கடமையாகும். அருள் பெறும்மார்க்கங்கள் பலவற்றுள்ளும் பக்தியொன்றே அதைச் சுலபமாயடையச் செய்கிறதென்பது சிறந்த பெரியார் துணிவாம்.

இவ்வுலகில் வழங்கப்பெறுவனவும், பற்பல மதக்கோட்பாடுகளைப் பிறக்கச்செய்வனவுமாய உறுதிப்பொருட்கள் நான்கனுள் இறுதிப் பொருளாகிய வீட்டெய்தப் பலபேர் பல சாதனங்களைக் கற்பிக்கினும், அவர்களோவ்வொருவரும் ஈற்றில் பக்தியையே குறிக்கின்றன ராகையின், பக்தியின் மகிமையைக் கூற நாம் தரமுடையரல்லோம். ஆயினும், பக்தியென்னும் சாதனப்பொருளை சான்றோர் எவ்விதம் பொருள் படுத்தினரென்றும், எங்ஙனந் தழுவிப்பிறவாழி நீந்தி நித்திய வீடாகிய மோட்ச சாம்பிராச்சிய மெய்தினரென்றும் நாம் அறிந்து அதனைக் கொள்ளுமியல்பினரா யிருத்தல் அத்தியாவசியகமே.

உலகின் கணுதித்த ஆன்மகோடிகள் ஒவ்வொன்றும் தோன்றியபோதே பரிசிக்கப்படாதவும், கண்ணுற் காணக்கூடாதவும், ஆனால் செய்கையாலறியக் கூடியவுமாய அன்பு என்னுமோர் அரிய பொருளைத் தம்முட்கொண்டே யிருக்கின்றது. இவ்வன்பு, முதலில் ஒருவனுள்ளே குடிகொண்டு பின்பு, தான் அவனிடத்திலேயே அடைக்கலமாக விருப்பது அடுக்காது எனக்கண்டு, அவனைக்கொண்டு பிறர்பால் தன்னைச்செலுத்தத் தூண்டுகின்றது. இதைத்தான் இச்சை அல்லது ஆசையென்று சொல்லுவது. ஒருவன் இவ்வாசையைப் பலர் பாலும் செலுத்துங்கால், அது நெய்விட்ட நெருப்பைப்போல் சுடர்விட்டு எரிய ஆரம்பிக்கவே, உலகப்பற்று அவனைப் பேயாட்டம் ஆட்டுகின்றது. இவ்வாட்டத்தில், அவன் ஒருக்கால் ஒருங்கே யின்பம் அனுபவிக்கின்றானெனினும், மாயவலையிற் சிக்கி மயக்குண்டு அவதிப்படுவதாக அவனுக்கு எண்ணம் பிறக்கும்பொழுது, இக்காயத்தினிடை வெறுப்புத்தட்டவே, அவன் மனமானது விஷய விசாரணைகளைச் செய்யத் தொடங்கி, கடைசியில் இப்பிரபஞ்சமே அநித்தியமென்றும் தெரிந்து அவனிடம் அன்பாய் விளங்கும் மனதைச்செலுத்துகிறான். இவ்வன்பு ஈசனிடமடையுந்தோறும் பக்தியென்று பெயர் பெறுகின்றது. ஒருவன் மனம் பரப்பிரமத்தினிடைச் செல்லாது மேற்கூறிய மற்ற விஷயங்களிலேயே செல்லுங்கால் அவன் பக்தியைப் பற்றுவது முடியாத காரியமென்றே சொல்லிவிடலாம்.

பக்தியென்பதின்னவென்று ஒருவாறு அறிந்த நாம் அதைப்பயிலும் முறையையும் உபயோகிக்குந் தன்மையையும் சிறிது பகர்வாம். பக்திசெய்வதின்ன காலத்திற்றானென்றும், இன்ன சமயத்திற்றானென்றும், இன்னவிடத்திற்றானென்றும், இன்னவயதிற்றானென்றும் வரம்பு கிடையா. கற்றாரும், மற்றாரும், பெரியாரும், சிறியாரும், எக்காலத்தும், எவ்விடத்தும் அதை யநுசரிக்கக்கூடியவரே யாவர். ஆனால், இளைஞருடைய மனம் அடையப்பெறும் ஒவ்வொரு விஷய வாசனையையும் கற்பிக்குமாறு கிரகித்து, அதை ஒருபோதும் மறக்காமல் தக்க சமயத்தில் வெளிப்படுத்து மியல்புடையதாயிருத்தலானும், அது களங்கமற்று கவலைகளில்லாமல் பரிசுத்தமாயிருக்கின்ற தாகையானும், அவர்களுக்குப் பெற்றார் நாடோறும் பக்தி ரசத்தைப்புகட்டி நன்னிலைமைக்குக் கொண்டு வருவார்களானால், வயது முதிர முதிர அது அவர்களிடத்தில் மேன்மை கொண்டு எவ்வளவு கஷ்ட நஷ்டங்களிலும் உண்டாட்டுக் கொண்டாட்டங்களிலும் அவர்களை விட்டு விலகாதென்பது திண்ணம். இங்ஙனமின்றி இளைமையிலேயே மிருகத்தன்மை போன்றிருந்து, வயது வந்த காலத்து பலர் சொல்லக்கேட்டு அதைக் கைக்கொள்ள முயலும்போது பலவகைத் துறைகளி

லும் இறங்கியமனம், தான் கண்டன, கேட்டன, உற்றன, உருதன முதலிய மார்க்கங்களிலேயே எக்காலத்தும் சென்று கொண்டிருப்பதால் ஒரு நிலையில் நிற்க மார்க்கந்தெரியாமல் தவிக்கின்றது. ஆகவே, பக்தி ரசத்தைப்பருக ஆரம்பிப்ப தற்கு இளமையே நல்ல தருணமென்று ஏற்படுகின்றது. ஆம். இளமையில் பக்திக்கே ஆப்த விரோதமாயிருந்த அநேகர் முதிர்பருவத்தில் அதற்கடியாராயிருப்பதை நாம் காண்கின் றோமே யெனின், அப்படியிருப்பவர்கள் பக்தியே தமக்கு வேண்டாமென்றும், பக்திசெய்யுமிடத்து அதையறிந்து அத ற்கு எதிர்மாறு செய்வதிலேயே தேர்ந்து கடைசியில் தாங்கள் கொண்டகருமம் தப்பென்று கண்டு நல்வழியிற் றிரும்பி நன்கு விளங்குகின்றனர். எனவே, உலகவியவகாரங்களேயே பெரி தெனக்கொண்டு, சகலமும் படைத்துக்காத்து அளித்துவரும் ஜெகதீசன்பாற் சித்தத்தைச் சிறிதாவது செலுத்தி நன்றிபா ராட்டாத நம் கூற்றை என்னென்பது! ஆகையால், வயிற்றுப் பாட்டிற்குப்படும் கஷ்டங்கள் பல விருப்பினும், சீட்டுக்கச்சே ரிக்கோ விளையாட்டுக்கச்சேரிக்கோ ஏற்பட்டிருக்கும் காலவள வில் ஓர் சிறு பாகத்தையாவது நாம் பக்திவழியிற் செலுத்து வது வீணுகாதே! இதைவிட அவைகள் சிறந்தனவல்லவே!

பக்திபயிலும் பருவம் இளமை எனக் கொள்வோமாயின், சிறு வயதிலே ஒன்றும் அறியாத பிள்ளைகளுக்கு, பல பொ ருள்களைக் கொண்டல்லவோ அறிவு கற்பிக்கிறோம், கண்ணுற் காணுதற்கரிய கடவுளைப்பற்றி எங்ஙனம் அறிதல் கூடும் என் றுலோ, நம் முன்னுள்ள பெரியோர்களாற் சமைக்கப்பெற்று ள்ள தெய்வ ஆலயங்கள் விக்கிரகங்களால் எழுந்தருளப்பெற்று பெருங்கீர்த்தி யடைந்திருக்கின்றன வாகையால், அவைகள் மூலமாய் அத்தகைமையருக்குப் பக்தியைப்படியச் செய்தல் கூடும். ஆலயங்கள் சிறு வயதுடையார்க்கு மாத்திரம் ஏற் பட்டதன்று; அவர்களைப்போல் மனம்படைக்கப் பெற்ற முதி யவருக்கும் அவைகள் நல்லுதவிபுரிகின்றன. இதனாலன்றோ, சிறு குழந்தைகளும் எளிதில் உணருமாறு, 'ஆலயந் தொழு வது சாலவு நன்று' என்று ஆன்றோரும் அமிர்தம் போற் கூறி யுள்ளார்.

(இன்னும் வரும்)

கே. ஆர். கணபதி பிள்ளை,

குணியமுத்தூர்.

கடை யெழுவள்ளல் வரலாறு

(197-ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வாவிநன் குடிக்குச் "சித்தன் வாழ்வு" எனப்பழம் பெயரொன்றிருப்பது "தமிழ் நாவலர் சரிதை"யால் அறியப்படு கிறது. அது:—

"நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்"

என்பதாம். சித்தன்வாழ்வுஎன்பதுமுருகக்கடவுள் கோயில்கொ ண்டமைபற்றி வந்தபெயர். சித்தன் பிள்ளையாருக்குத் திருநா மம். இனி "ஆய்" என்னும் வள்ளலிருந்த ஊர் "ஆய்குடி" என வழங்கப்பட்டவாறுபோல பேகனது குடியின் முன்னோன் ஆவி என்பவன் வசித்துவந்த காரணம்பற்றி ஆவி நன்குடிஎன்றுவழ ங்கப்பட்டதுபோலும். பேகன் ஆவியர் குடியினன் என்பது:—

"அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னுடன் பேகனும்" (சிறு-பா-)
"அதுமனெம் பரிசிலாவியர் கோவே" (புற-147)
"முழவுறழ் திணிதோ ணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" (அக-61)
"வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ
லுருவக் குதிரை மழவ ரோட்டிய
முருக னற்போர் நெடுவே ளாவி
யறுகோட் டியானைப் பொதினியாங்கண்" (அக-1)

என வருவனவற்றால் இனிதுணரப்படும். இப்பேகன் என்னும் வள்ளலை வையாவிக்கோப் பெரும்பேகன் எனவும் வழங்குவர். இது 141 ஆம் புறப்பாட்டால் அறியலாகும். இவன் ஆவியர் குடியிற் பிறந்து சிறப்புற்றதால் அக்குடி முதல்வனை ஆவியி னன் பகுதிப்பட்டானைகச் சிறப்பித்து "வையாவி" என வழங் கினர் போலும். வை—பகுதி; "வைக்கோலுங் கூர்மையும் பகு தியும் வைபெனல்" என்பது பிங்கலம். பழனியிலுள்ள ஓர் குளத் துக்கு இன்னும், வையாபுரி(வையாவிபுரி) என்று பெயர்வழங்கு வது யாவரும் அறிவர். இதுவும் முன்னுரைத்த வையாவி என் னும் பெயர் வழக்கினைப் புலப்படுத்தல் காண்க. இவ்வள்ளல் கொடை மடத்தால் மிக்கானென்பதும், அன்பும், அருளும் ஆண் மையும், எழிலும், திருவும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்பி னன் என்பதும், "புறநானூறு," "சிறுபாணாற்றுப்படை" முதலிய சங்கநூல்களால் அறியப்படுவன. இவன்ஈகை நலத்தின் சிறப் புக்கள் பலவுளவேனும்அத்தனையுங்கூறில் விரியுமென்றஞ்சிஅவ ற்றில் ஒரு சம்பவத்தை மட்டும் இங்கு கூறுவாம் அது:—

பேகன் ஒருகால் மலைவளங்காணும் பொருட்டுச் சோலை சூழ்ந்து காடுகள் நிறம்பிய குன்றுகளினிடையே உலாவிக் கொண்டிருக்கையில், திடும்பிரவேசமாகப் பெருமழைபெய்ய, அதனால் குளிர் தோன்றி நளிர்பிடித்துப் பல்லுக்கிட்ட வள்ளல் மிகவருந்தி கம்பளிப்போர்வை யொன்று போர்த்து மரத்தின் ஒருபுறம் ஒதுங்கி நின்றனன். அது சமயம் இவனெதிரேநின்ற ஆண்மயிலொன்று மேகசஞ்சாரத்தைக் கண்டு மிகவும் களித்துக்கூவித்தன் அழகிய கலாபத்தை விரித்து ஆடியது. இக்கோலங்கண்ட வள்ளல் "ஆ ஆ! இதுவுமன்றோ நம்மைப்போலக் குளிருக்காற்றாது வருந்தி நடுக்கலுடன் ஆடுகிறது. இங்ஙனம் துன்புறும் எளியபட்சிக்கு இரங்குதலன்றோ ஜீவகாருண்ய மென்பது" எனக்கருதித் தாம் போர்த்திருந்த உயரிய அப்போர்வையை எடுத்து அதன்மீது போர்த்துவிட்டுத் தான் நனைந்த ஆடையுடன் குளிரோடு தன் அரண்மனைவந்தடைந்தான் என்பதே. இச்செய்தியை,

"உடாஅ போரா ஆகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக." (புறம்-141)

எனப்பரணரும்,

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளி
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம்-145)

எனவன்பரணரும்,

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்." (சிறு-பா-அடி-84-87)

என நத்தனாரும் நன்கு விளக்கினர். பின்னும்,

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த இறைவர்போல் நீயுங்
கரவாம லீகை கடன்"

எனப்புறப்பொருள் வெண்பா மாலையினும்,

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க் கணி"

எனப் பழமொழி நானூற்றினும் இச்செய்தி விளக்கப்பட்டிருப்பதும் தக்க சான்றாம். (இன்னும் வரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

கல்வி

(193-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல், அவ்வாறு மனம்படிய, தகுந்த ஆசிரியரிடத்து ஊக்கததுடனே கற்றலும், கற்றதை மனம் ஊன்ற, ஒரு முறைக்கு இருமுறை வாசித்தலும், அத்தகைய மாணுக்கர்களோடு பலகேள்விகள் மூலமாய் சம்பாஷித்தலும், தன்னை பிறருக்கு போதிக்குந் தன்மையையுடையவனுகச் செய்து கொள்ளுதலினுலேயுமே சித்திக்கும். இதனுல் தான்,

"ஆசானுரைத்த தமைவரக்கொளினும்
காற்கூறல்லது பற்றலனுகும்."
"அவ்வினையாளரொடு பயில்வகையொருகால்
செவ்விதினுரைப்ப வவ்விருகாலும்
மையறு புலமை மாண்புடைத்தாகும்."

என நன்னூல் சூத்திரக்காரரும்,

"எத்துணைய வாயினுங் கல்வியிடமறிந்
துய்த்துணர் வில்லெனினில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மையின்றெனி னென்னுமஃதுண்டேல்
பொன்மலர் நாற்றமுடைத்து." என குமரகுரு

பரசுவாமிகளும் மொழிந்துள்ளார்கள். ஆதலினுல் இளமையிருந்து, தக்க குருவினிடம் கற்றலும், சபையில் மனங் கூசாது, ஓர் விஷயத்தைக்கூற முன்வருதலாகிய தன்மையை, யடையும் விதமாகக் கற்றலுமே, கற்கும் விதமாம்.

6. கல்விப்பொருட்கும் மற்ற பொருட்குமுள்ள பேதம்.

கல்வியை யொழிந்த மற்ற பொருள்களை நாம் வைத்த விடத்திலிருந்து பிறரால் அபகரித்துக்கொள்ளக்கூடும். நாமே பிறருக்கு கொடுத்தாலும், குறைந்து விடும். அரசரானவர் நம்மீது கோபிப்பாராயின், அதைக் கெடுதியுறச் செய்யக் கூடும். மற்றும் பலகாரணங்களாலும், அழியக்கூடும். கல்வியோ,

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பினரசர் செறின்வவ்வார்
எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற." என்றபடியும்,

"கேடில்விழுச் செல்வங் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றயவை." என்றபடியும்

எவ்விதத்திலும், அழியாததும், இதையே பெற்றோர்கள் மக்கட்கு ஆஸ்தியாகச் சேர்த்துவைக்க வேண்டியதுமாகும். ஆதலால் மற்ற பொருள்களைவிட கல்வியே மேன்மையுடையது என்பது பெறப்படுகிறது.

முடிவுரை.

கல்வி என்பது தொழிற் பெயரென்றும், இதற்கு பல காரணத்தால் பலபெயர்களுண்டென்றும், அத்தொழில் அறிவை விர்த்திசெய்தலென்றும், கல்வி, உலகக்கல்வி, அறிவுக்கல்வி என இருவிதமென்றும், அவை இன்னவை என்றும், இவற்றிற்கெல்லா மாதாரமானது, எண்கல்வி, எழுத்துக் கல்வி என்றும், கல்வியின் முக்கியபயன் அறிவு விர்த்தியும், நன்மை என்று சொல்லப்படுவன வனைத்துமுண்டாகிறதென்றும், ஆனால் தக்கநூல்களை கற்று கற்றவாறொழுகினால் தான் இப்பயன் உண்டாமென்றும், கல்வியை மானிடப்பிறவியை அடைந்ததின் பயனாகிய கடவுள் வழிபாட்டிலும், அடக்கம் முதலாகிய ஒழுக்கங்களிலும், உபயோகப்படுத்துதல்தான் பிரயோசனமென்றும்,நமக்கு கல்வி அதி அத்தியாவசிகமானதென்றும், அதை இளமை முதற்கொண்டே, தகுந்த ஆசிரியரிடத்து கற்று,சபையில் மனங்கூசாது, பேசும் வன்மையையுடையவராகும் வண்ணம் கற்கவேண்டுமென்றும், மற்ற பொருள்களைவிட, கல்விப் பொருளே கெடாததும், மேன்மையுடையது மென்றுங்கூறப் பட்டது. ஆகையால் இன்னணம் மாக்ஷிமை வாய்ந்த கல்வியானது உலகமெங்கும் பரவி யாவருஞ் சிறப்புறும்படி கற்றுணர்ந்த மேதாவிகள் முயற்சி எடுத்துக்கொள்ள, எல்லாம் வல்ல இறைவன் கருணைபுரிய அவர்பாத பத்மங்களை பிரார்த்திப் போமாக.

க குப்புசாமி முதலியார்,
சரஸ சன்மார்க்க சங்கம் புதுப்பாளையம்.

ஒற்றுமை

ஒற்றுமை என்பது ஒற்று என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற் பெயர். அஃதாவது தனித்தனியான பலமனிதர்கள் அல்லது வஸ்துக்கள் ஒன்றுகூடி யிருக்கும்படியான, தொழிலினுடைய பெயராயிருப்பது. ஒற்றுமை, கலப்பு, ஐக்கியம், ஒருமை, சேர்க்கை என்பன ஒருபொருட் சொற்கள். இவ்வொற்றுமையானது, உலகத்தில் மக்களாய்ப் பிறந்த நமக்கு, இன்றியமையாது வேண்டப்படுஞ் சாதனங்களுளொன்று. எதனாலெனின், ஜகத்தின் கண் நடந்தேறுகிற ஒவ்வொரு காரியமும் ஒற்றுமையினாலானதே. திருஷ்டாந்தமாய், ஒவ்வொரு குடும்பமும் ஒற்றுமையினாலேயே நடந்தேறவேண்டி யிருக்கிறது. உத்ஸவாதிகள், தோப்புகள், குளம், கிணறுகள், சத்திரங்கள் முதலியவைகளை உண்டாக்க வேண்டுமானால் பலமனிதர்கள் சேர்ந்து ஒற்றுமையுடன் செய்ய, முடிவெய்து மொழிய, இன்னொருவரை எதிர்ப்பாராமல் ஒருவர் தானே செய்து முடிக்கவேண்டு மென்றால் முடியாது. மேலும் கிராமத்திலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து, நமக்கவசியமான வண்ணான், அம்பட்டன், குயவன், பணிசெய்பவன், நீர்க்கட்டி முதலிய தொழிலாளிகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதனால் தான், அவர்களால் ஆகவேண்டிய காரியங்கள் யாவும் சொற்ப செலவினால் நமக்கு சுகமே நடந்தேறுகிறது. இல்லாவிடில், தனித்தனி ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலாளிகளை நியமித்துக்கொள்ளவும், அல்லது நாமேசெய்து கொள்ளவும் முடியுமா முடியாது. அதோடு இவ்வேற்பாட்டினால் தொழிலாளிகளும் தத்தமக்கு தெரிந்திருக்கும் ஒரேவித காரியத்தினால், போதுமான வரும்படியை அடைகிறார்கள். இங்ஙனம், ஒற்றுமையானது, இருதிறத்தாருக்கும் சுகத்தைக் கொடுக்கிறது. ஆனால் நாம் தனியே ஒருசிறு காரியத்தையாவது, செய்து கொள்ளமுடியாதோவெனின், முடியாது. திருஷ்டாந்தமாய் நாம் நம்முடைய சினேகிதரொருவருக்கு கடிதம் எழுதுவதாகிய காரியத்தை செய்து முடிப்பதாக வைத்துக் கொள்வோம், அப்போதும், அக்காரியம் முடிவதற்கு அதற்கு அங்கங்களாகவுள்ள கடிதம் எழுதுகோல், இங்கிபுட்டி, இங்கி, கையின் சௌகரியம் முதலியன ஒத்திருந்தால் தான், அக்காரியமும், பூர்த்தியாகும். இதைப்போன்றே உற்றுநோக்கினால் ஒவ்வொரு காரியமும், ஒற்றுமையினாலேயே

நடந்தேற வேண்டுமென்பது திண்ணம். அதிகம் சொல்வானேன், இவ்வுலகமே பஞ்சபூதங்களின் ஒற்றுமையாலுண்டாயிற்றென்பது ஸ்பஷ்டம். அதோடு ஒற்றுமையே மேன்மையையும், அழகையும் தருகிறது. எங்ஙனமெனில்:—ஒவ்வொருவரும் எழுதும்படியான எழுத்துக்களில் சிலர் எழுதுவது அழகாயும், கெம்பீரமாயும் இருக்கிறது; சிலர் எழுதுவது அழகின்றியும், அருவருப்பாயு மிருக்கிறது. இதற்கு காரணம், எழுதுபவர் ஓர் எழுத்தை வலப்புறமாயும், ஓர் யெழுத்தை இடப்புறமாயுஞ்சாய்த்தும், ஒன்றை நேர் நிறுத்தியும், சிலவற்றை பெரிதாயும், சிலவற்றை சிறிதாயும், வரிகளை ஏற்றக்குறைவாயும், ஒன்றுக்கொன்று ஒற்றுமையின்றியும் எழுதினல் அழகின்றியும் விகாரமாயுங் காணப்படுகிறது.சிலர் அச்சு எழுத்தைப்போல் எழுதாவிட்டாலும், ஓர் எழுத்தை இடப்புறம் சாய்த்தால் இடப்புறமாயும், வலப்புறம் சாய்த்தால் வலப்புறமாயும், நேர் நிறுத்தினல் நேராயும், வரிகள் ஒழுங்காகவும், ஒருவித ஒற்றுமைப்படுத்தி எழுதுவதினல், அழகாகவும் ரஞ்சகமாகவும் காணப்படுகிறது. இதைப்போலவே புஷ்பமாலை தொடுப்பவன் ஒன்று முன்னும், ஒன்று பின்னும் வரவொட்டாமல், ஒற்றுமைப் படுத்தி அடிப்புறம்பருமனும், நுனிப்புறம் சிறுமனும் வரும்படி சரிப்படத் தொடுப்பானுகில், அம்மாலை அழகால் பொலிந்து விளங்கும். பின்னும் யோசிக்கின் ஓர் விட்டைக் கட்டுபவன் கற்களை ஒற்றுமையுடனே அமைத்து சுவற்றை எழுப்பியும், மற்ற மரச்சாமான் முதலியவைகளை, எவ்வெவ் வண்ணம் அமைக்க வேண்டுமோ அவ்வவ்வண்ணம் ஒற்றுமையுற அமைத்தும் கட்டுவானுனல், வீடாகிய காரியம் முடிவதோடு, அழகாயும் மென்மையாயும் விளங்கும். ஆதலால், மனிதர்களாகிய நாம் ஒவ்வொரு காரியமும் ஒற்றுமையாலேயே முடிவதை யோசித்து நம்முடையமுன்னேற்றத்திற்கு அவசியமான, கல்வி, கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலாகிய பொதுக் காரியங்களில், ஒற்றுமையுடன் உழைக்க முன்னுக்கு வரவேண்டும். அயல் நாடுகளனைத்தும் ஒற்றுமையினுலேயே மேன்மை பெற்றிருக்கின்றன. நாம் ஒற்றுமையா யுழைத்தால் தான் காரியங்களை சாதித்துக் கொள்ளலாமென்றுல் வர்ணுச்சிரம. தர்மகளை யெல்லாம் விட்டு ஒரே தன்மையை உடையவராயிருந்து உழைக்கவேண்டுமென்று கருதுதல் கூடாது. ஏனெனின் ஒரு புஸ்தகத்திலுள்ள எழுத்

துக்களனைத்தும் ஒற்றுமையாய்த் தான் இருக்கிறது. இருந்தும் அவை யெல்லாம், ஒரேஎழுத்தாயிருந்தால் அதில் எவ்வண்ணம் ஒரு விஷயமு மேற்படாதோ அதுபோல, நம்முடைய வர்ணாச் சிரம தர்மங்களை விட்டு விடுதல் சிறப்புடைய தல்ல. ஆதலால் நாம் எதில் எதில் ஒற்றுமையாயிருக்க வேண்டுமோ அதில் ஒற் றுமையும் எதில் பிரிந்து இருக்கவேண்டுமோ அதில் பிரிந்து மிருக்க வேண்டும். இதற்கே வேற்றுமையில் ஒற்றுமை என்று பெயர். ஆகையால் நாம் நமக்கு ஏற்பட்டிருக்கும் காரியங்களை இயற்றுவதோடு தேச நன்மைக் கேதுவான பொதுக் காரியங் களில் பெரிதும் ஒத்து உழைக்க வேண்டும். ஒற்றுமையானது விர்த்தியாவதற்கேது, ஒவ்வொருவரும் பொது நலப்பிரியமான பரோபகார சிந்தையை யுடையவராயிருத்தலும், அது கெடுதற் கேது சுய நலப்பிரியமான அவாவுடையரா யிருத்தலுமேயாம். ஆதலினால் ஒற்றுமை கெடுதற்கு ஏதுவானதை நீக்கி, விர்த்திக் கேதுவானதை கைக்கொள்ள வேண்டும் ஒற்றுமையானது இவ் வளவு சிறப்பையுடையதா யிருப்பதினாலேதான்.

"ஒற்றுமை தானே யுயர்நிலைவித்தாம்" எனவும்.

"ஐக்கியத்தா லாகாத தில்லை" எனவும்.

"எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" எனவும்.

ஆன்றோர் மொழிகள் அறிவுறுத்து கின்றன.

ஆகையால் இத்தகைய ஒற்றுமையை நாம் யாவரும் கடை பிடித் தொழுகி கடைத்தேறக் கடவுள் கருணைபுரி வாராக.

கு. குப்புசாமி முதலியார்,
சமரஸ சன்மார்க்க சங்கம், புதுப்பாளையம்.

இரண்டு பெண்டாட்டிகளுக்குப் புருஷன்

ஒரு கிழவனுக்குக் கிழவி யொருத்தியும் யுவதி யொருத்தி யுமாக இரண்டு பெண்டாட்டிக ளுண்டு. புருஷனுடைய தலைம யிர் நரைத்துப் போவதைக் கண்டு இளையவள் ஒன்றொன்றாய் வெண் மயிர்களை யீர்த்து விடுவாள். மூத்தவளோ, கணவன் தன்னிலும் சிறியவனென்று நால்வரும் நகைப்பரென் றஞ்சிக், கருமயிர்களை யெல்லாம் வலித்து விடுவாள். இவ்வாறு இருவர் நடுவே புருஷனவன் நாளடைவில் வழுக்கையாய் விட்டான்.

தென்காசித் தண்டபாணிக் கடவுள் காப்புமாலை

காப்பு

துதிக்கைக் கருளுந் துதிக்கைப் பெருமான்,
விதிக்கைக் கருளும் விரைத்தாள் பணிவாம்.

நூல்

தெள்ளு நனிபாற் கடலெழுந்த செல்வி யமைத்தோன் புணர்ந்தாண்ட, வள்ளன் மருகா முருகெழுந்து வளருந்தண்டா யுதனே யென், னுள்ள நிலைவெம் பவவெயிலா லுணங்கா துணங்கி மெலியாமற், கள்ளுன் மலர்த்தாணிழலீந்தே கனவாழ் வருளிக் காப்பாயே (க)

வண்டார் கடப்ப மலர்மாலை மறைத்திங் கிணர்கூர் வேம்பினலர், கொண்டார் களபத் தடமார்பா குவட்டிர்க் கரசா மேருவினைச், செண்டாற் புடைத்தங் கதன்பேழை திறந்த திறலாய் கடைநோக்காற், கண்டார் வத்தோ டருள் சுரந்து கனவாழ் வருளிக் காப்பாயே (2)

மாணக் கரத்தால் வினைக்களவாய் வனைந்து விடுக்கு மயனும்
காண முடியா ரரியாருங் காண முடியாதவன் சேயே
பேணு ஞானப் பரவீட்டிற் பிறங்கு மோனத் துன்வடிவைக்
காணக் கருணை வியல்காட்டிக் கனவாழ் வருளிக் காப்பாயே

அந்த மிகுந்த வமலோனே அலகி றமிழா லுயர்ந்தோனே
சந்த மிகுந்த புலன்வென்ற சாது வடியார்க் குறவோனே [ன்
தொந்த மிகுந்த வினையேனென் றுன்பக் கடற்கோர் புணையாகி
கந்த மிகுந்த கழலீந்தே கனவாழ் வருளிக் காப்பாயே (4)

நீரிலேடும் வெண்ணீறும் நேரில் சமணர் கழுமீதும்,
பாரிற் சைவா கமநெறியும் பரிவுற்றேறக் கூனேராய்த்,
தாரில் வேப்ப னுய்ந்தேற வைத்த சமர்த்தா நின்கருணைக்
காரி லென்றீ வினையவித்துக் கனவாழ் வருளிக் காப்பாயே (5)

பருதி வெருவக் கடல்சுவரப் பார மலையு மாமரமும்
துரிசி னசுரர் படையியாவுந் தொலைய வேல்விட் டமராடி [ன்
சரதங் கதியென் றடைசுரர்க்குத் தனிநா டளித்த முருகாயியா
கருது மனைத்து நலமாகக் கனவாழ் வருளிக் காப்பாயே (6)

பனசக் கனியின் றேனோடிப் பாயும் பழனப் பயிர்க்கதிர்கள்
வனசக் குலத்தை திருமாது வளருங் கோயி லெனவணங்கத்
தினசங் காதி முழங்குவளந் திகழ்தென் காசிப்பதி வாழுங்
கனசம் போதென் குலக்கொ ழுந்தே கனவாழ் வருளிக் காப்
பாயே (7)

ச. மாடசாமிப்பண்டாரம்,
தென்காசி.

"வாசாஞானம்"

"கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையிலே வேகக்கண்டும் எண்ணுந் திறமாயிருப்ப மென்றெண்ணுதே" என்று உண்மை ஞானமுணர்ந்து அவ்வாறு லகிற்கும் உணர்த்திய கருணை வள்ளலாம் நம்மடிகள் அருளியிருப்பதனை நன்கு ஆய்வோமாயின், ஒரு தேகத்தினிடமாக வாஸஞ்செய்து கொண்டிருந்த உயிர் அத்தேகத்தினின்றும் நீங்கிவிட சுற்றத்தார் உறன் முறையார் யாவரும் அதன்மேல் விழுந்து அழுது ஸ்நானம்செய்வித்து வஸ்திரா பரண கஸ்தூரிகளால் பாவத்தையே செய்து நாற்றமே மிகுந்து வீசாநின்ற உடம்பினை அலங்கரித்து அதிசீக்கிரம் இளவாலிபர்கள் தூக்கிச்சுடலையடைந்து விறகு முதலியவற்றால் தகனஞ்செய்ய அவ்வாறு எரிவதை பிரத்யக்ஷக் காக்ஷிப் பிரமாணமாகப் பார்த்து, "மானிடவாழ்வெனச் சதமில்லை! யென்னவாழ்வு!!" யென்று மசான வைராக்ய வாசா ஞானங்கூறி தாம்மட்டும் இறவாது நித்திய ஜீவிகளாயிருப்போமென்றெண்ணுவது என்ன அறியாமை என்பதும், அத்தகைய மசான வைராக்ய வாசா ஞானங்களால் பயன் யாதுமிலதென்பதும் தெற்றென விளங்கற் பாலதாம்.

ஸ்ருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாசம், சைவ ஆகமம் முதலிய ஆன்ருேர் வாக்கியங்களும், பெரியார் அருள் மொழிகளும், மெய்ஞான பிரஸ்தாவனைகளும் அரிய கிரந்தங்களும், வித்வான் முதல் பாமரன் ஈராக உள்ள சர்வத்திராளுக்கும் கசடறத் தெரிந்து அதன்படி சிறிதும் வழுவுருது நடந்து அதன் பால் எல்லையில்லாயின்பப் பேற்றினை அடைவதற்கே ஏற்பட்டனவே யன்றி, ஒவ்வொருவரும் தம்மைமட்டும் நீக்கிமற்றவர்க்கு என்று ஒழுகுவதற்கு ஏற்படவில்லை யென்பது ஒருதலை உண்மையாம்.

அவ்வாறொழுகலால் ஒருபோதும் பயனிலது. வஸ்திரமணிதல் ஆகாரமெடுத்தல் முதலாகிய நித்திய கர்மங்களை எவராவது "மற்றவர்க்கு மட்டுந்தான்" என்று சொல்லி தாம்அனுஷ்டியாது நீங்கியிருப்பரோ? அதற்கேனும் துணிவாரோ? ஐய! ஒரு நிமிஷமேனும் இருக்கமாட்டார். இது விஷயங்களில் "தமக்குத்தான்" என்று சொல்லி காலந்தவறுது செய்துமுடிப்பர். அகண்டபரிபூரணமாய், சுத்த நிர்மலமாய், களங்கரகிதமாய்

மனோவாக்குகாயம் மென்பனவாய திரிகரணங்களாலும் கிருஹி க்கக்கூடாத அகோசர வஸ்துவாய் நின்றிலங்கும் சாக்ஷாத் பரம்பொருளோடு பரம்பொருளாய் பரானந்த நிலையெய்தி ஸ்வானுபூதிச் செல்வராய் விளங்குதல் விடுத்து, கேவலம் அழி யுந்தன்மையுடைய, மாம்ஸமயமாய இவ்வாக்கையை போஷிப் பதிலும், மலமூத்திராதிகள் நிறைந்த ஊத்தைப்பாண்டத்தை வஸ்திராபரண களபகஸ்தூரிகளால் ஊத்தையாம் ஆபாஸத்தை மூடி வீண்டம்பத்தில் ஸ்வானுபூதியா யிருத்தலால் பயன் யாது உறுவம்?

அந்தோ! மீண்டும் மீண்டும் துன்பமாம் துக்கசாகரத்திற் கே மீளாது ஆளாகின்றனம். "வாழ்வு நிலையாது. என்ன சுகம். துக்கமே பொருந்தியது இச்சன்மம், ஜகத்மித்தை, அனி த்திய மிவ்வுலகம்" என்று ஹிருதயத்தின்மேல் வாயால்மட்டும் சொல்லிவிட்டு மறுபடியும் கேவலம் மாயா சம்பந்தமான துன் பமயமாம் இவ்வுலக வாழ்வே பெரிதும் பற்றி தேகாபிமானம் மேலிட்டு தன தான்யாதி பெண்டு புத்ராதி வயப்பட்டுக் கிடந் துழல்வதும் என்மதியோ? எற்றிற்கோ சாஸ்திரங்கற்றது? பெ ரியார் பால் பகரக்கேட்டது? சாதுக்கள் சங்கஞ்சார்ந்தது? பேரிடி மயக்கமாம் அனர்த்தத்தை விளைவிக்கும்பெரும் துன்ப சாகரத்தில் கரைசேராது தத்தளிக்கவோ இவண் கற்றதும் கேட்டதும் சாது சங்கம் சார்ந்ததும்? நம்பேதமைதானிருந்த வாறு யாது?

அம்மம்ம! வாசாஞானங்கூறி சம்ஸாரமாம் பெருஞ்சுழி யிலகப்பட்டு மோசம் போவதற்கன்று! நாம் படித்ததும் பகரக் கேட்டதும் சாதுக்கள் சங்கஞ்சார்ந்ததும். அவ்விதம் எண் ணற்க! எண்ணின் மீண்டும் வந்து சூழ்ந்திடும் பந்தம். பந்தம் ஒழிந்திடப்பகர்ந்திடாதே வாய்ஞானம். பயனிலததனல். ஐய! பந்தமே ஒழிந்திட்டால் பெற்றிடலாம் பரமசுகம்.அதனல் துக் கமே கிஞ்சிற்றுமில்லாத மாறாத எல்லையில்லா யின்பம் எளிதி னில் பெற்றிடலாம். தற்சமயம் கண்டிடாதசுகம். அனுபவி யாத ஆனந்தம். சொல்லவே முடியாத பிரம்மானந்தம். இவ்வா னந்தம் பந்தநேசன் "வாய்ஞானம்" கூறுவதொழிந்து பரமனை நினைந்து பக்தி பண்ணிக்கொண்டிருந்தாலன்றி ஒருபோழ்துங் கிட்டாதாம்.

சிறிதும் யோசனையின்றி வாய்ஞானங்கூறும் ஹே அறிவிலியே! சிறிதாயினும்! நின்வைராக்யம் வர்சாவில்தான். ஆண்மையில்லாத ஞான சூன்யமே! வாசாவிலிருப்பதுதான் வைராக்யமோ? புருஷத்துவம் இல்லாதபதரே! நின் புருஷத்துவம் எங்கே? ஆண்மை வீரம் ஸ்வதந்திரத்துவம் எங்கு ஒழிந்தது? ஏன் பரதந்திரத்தை நாடுகின்றனை? நின்விவேகம் எனும் நேத்திரம் எங்கே? ஸ்வதந்திரமுடைய புருஷவீரா! நீஸ்வதந்திரன். பரதந்திரத்தை நாடாதே. துயர்புகுத்திடும் விஷயங்கள் வயப்பட்டு மயங்காதே. ஆனந்த மீந்திடும் நிர்விஷயமாம் பரம்பொருளை நாடு. நாடின் பரமசுகம் கிட்டும்.

நாடாது வாய்ஞானங்கூறி விஷயங்களின் வயப்பட்டு, விவேகமாம் நேத்திரத்தை உபயோகியாது, பரதந்திரத்தை நாடி நின் புருஷத்துவம், ஸ்வதந்திரத்துவம் யாவற்றையு மிழந்து சம்ஸாரபந்தத்திற்குள்ளாகி வீணே அவதிப்படுகின்றனம்.

ஆகலின், நாம் ஒரு காலத்திலிறப்போம், நித்தியமில்லை என்று தேறி, விஷயபோகம் துன்பம் தருவனவாதலால் அதன் வயப்பட்டு நம்ஸ்வதந்திரத்தை யிழந்துவிடாது, ஸ்வதந்திர புத்தியாலே விவேகமெனும் நேத்திரங்கொண்டு நித்தியாநித்தியவஸ்துக்களின் பாகுபாடு தெரிந்து, அநித்தியத்தினை நிஷேதிக்கு நித்தியமாம் பரம்பொருளை நாடி “பிரம்மோஹம்” தியானஞ்செய்து நிரதிசயானந்தத்தினை யெய்துவோமாக!

“ தமத்துகளொளித்துத்தனையேயுணர்க ”

சே. பகவதியானந்தம்.

கழுதையும், வண்ணானும்

ஒரு வண்ணான் தன் கழுதையை ஒருநாள், செவ்வையாய் வளர்ந்து செழிப்புற்றிருந்த பயிரில் மேயவிட்டுத், தான் கழனி வரம்பில் உட்கார்ந்திருந்தான். கொஞ்ச நேரத்துக்கு மேல் தூரத்தில் கழனிக்குடையவன்வந்து கொண்டிருப்பதைக்கண்டு, வண்ணான்—அடா, அதோ வயற்காரன் வந்துகொண் டிருக்கின்றான். இங்கு நின்றால் உன்னை இழுத்துக்கொண்டு போய்விடுவான். ஆதலால் வா,வா, ஓடியே வந்துவிடு—என்றழைத்தான். அப்பொழுது கழுதை—அவனுக்கு நானேன் பயப்பட வேண்டும்? எவனிடத்திலிருந்தா லெனக்கென்ன? அவன் மாத்திரமென்ன, நான் சுமக்க வொண்ணுப் பளுவைச் சுமத்தமாட்டானல்லவா? — என்றது.

வேம்பு

வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணாது அடியேன்
நான்பின்னும்முன் சேவடி யன்றி நயவேன்
தேம்பலிளந் திங்கள் சிறைவிடுத்து ஐவாய்ப்
பாம்பினணைப் பள்ளிகொண்டாய் பரஞ்சோதீ!

(பெரிய திருமொழி)

வேப்பமரமானது இந்தியாவில் மிகுதியாய்க் காணக்கூடியது. இது ஏறக்குறைய நூறடிவரையில் உயர்ந்து வளரும். இது பெரும்பான்மையும் வித்திலிருந்து உற்பத்தியாகின்றது. இதுதானே வளருந் தன்மையது. இதனால் இதை யாரும் விசேஷமாய்ப் பயிரிடுவதில்லை. இம்மரம் சிறு பிள்ளைகளும் அறியக் கூடிய அவ்வளவு சாதாரணமானது. இம்மரத்திலுண்டாகும் ஒவ்வொரு வஸ்துவும் கசப்பாகவே இருக்கும். கசப்புக்குச் சாதாரண உதாரணம் வேம்பே. சாலையோரங்களில் நிழலுக்காக இம்மரம் சில இடங்களில் நடப்படுகின்றது. மாரியம்மன் கோயில்களில் இம்மரம் அவசியம் இருந்தேதீரும். வேப்பமரமும் அரசமரமும் பின்னிக்கொண்டிருந்தால் அம்மரங்களின் கீழே நாக பூசை விசேஷமாய்ச் செய்யப்படுகின்றது. அரசு ஆண் மரமென்றும், வேம்பு பெண்மரமென்றும் கூறுகிறார்கள். இவைகளைக் காலையிலும் மாலையிலும், பேய் பிடியுண்டவர்களும், பிணியாளர்களும் வலம் வருகின்றார்கள் வேம்பின்மீது வீசி வருங்காற்று மிகவும் ஆரோக்கியத்தைத் தருவது. இதனால் தான் சிலர்தாம் குடியிருக்கும் வீட்டினருகே இம்மரத்தை வைத்து வளர்க்கின்றார்கள். வேப்பமரங்கள் மிகுதியாயுள்ள கிராமங்களில் சுரம் முதலிய தொற்று நோய்கள் வருவதில்லையென்றும் அவையில்லாத கிராமங்களில் அந்நோய்கள் மிகுதியாகப் பரவுகிறதென்றும் மேலைத்தேய வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

இதன் இலை சிறியதாகவும், கூர்மையுள்ளதாகவும் இருக்கும். பழம் பார்ப்பதற்கு வெகு அழகாயிருக்கும். இதனைக் காக்கை மிகவும் விரும்பித்தின்னும். இதனாலன்றோ "வேம்பன்றோ காக்கை விரும்புங்கனி" என்ற மூதுரையும் எழுந்தது. நன்றாய்ப் பழுத்தபழம் சிவலிங்கம்போல் தோற்றப்படும். சிவபத்தியிற் சிறந்த வரகுணதேவர் வேப்பங்கனிகளையெல்லாம் சிவலிங்கத் திருமேனிகளாகக் கண்டதாகச் சரிதங்கூறும்.

இதனை, "காம்பவிழ்த்துதிர்ந்த கனியுருக்கண்டு, வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்" என்ற பட்டினத்தடிகளது திருவருட்பாவில் அறிக.

வார்த்திபேதி, அம்மை முதலிய தொற்றுநோயுள்ள வீடுக ளில் இதன் இலை மிகுதியும் பலவகையாக உபயோகப்படுத்தப் படுகின்றது, இந்நோய்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குப் பரவுவது, ஈ கொசு முதலிய பிராணிகளின் மூலமாக என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இவ்விலையை ஷ வியாதிகளுள்ள இடங்களிற் கட்டுவதினால் ஷ ஜந்துக்கள் அவ்விடத்திலிருந்து விலகிப்போடிப் போகின்றன. இதனால் இந்நோய்களும் பரவுதலும் தடுக்கப்படுகின்றன.

இம்மரத்தினது இலை, பட்டை, வேர், பூ, பழம், வித்து, பிண்ணாக்கு ஆகிய யாவும் ஔஷதகுணம் பொருந்தியவை. இத னெண்ணெய் அநேக வியாதிகளைப் போக்குகின்றது, மிருகங் களுக்கு உண்டாகும் புண்ணுக்கு இவ்வெண்ணெயைத் தடவி னால் ஈ, கொசு மொய்த்துத் தொந்தரை செய்யாது; புண் சீக் கிரம் ஆறிவிடும். இம்மரம் பங்குனி சித்திரை மாதங்களில் பூத்துக் காய்க்கும். வேப்பம் பூவை வடகம்செய்து சாப்பிடு வது வழக்கம். மிளகு இரசத்திற்கும் உபயோகிக்கலாம். இது அதிக வாசனையுள்ளது; வெண்மை நிறம் வாய்ந்தது.

மிருந்த ஜன்னிகண்டவர்களுக்கு, வேப்பம் பிண்ணாக் கைக் கொளுத்தி அதன் புகையைக்காட்டினால் குளிர் குறையும். ஓலை மந்திரிக்க உதவுகின்றது. ஆ மாடுகளுக்கு தீவனமாக வும் உதவும், வேப்பங்குச்சியினால் சிலர் பல் துலக்குகின்றார் கள். இளந்துளிரைத் தின்றால் சிற்றின்ப ஆசைநீங்குமென்று சிலர் சொல்லுகின்றார்கள்.

இம்மரத்தின் வேரிலிருந்து ஒரு வகைக்கள்ளும் இறக்கப் படுகின்றது. இக்கள் மருந்தாக உபயோகப்படுகின்றது.

இதன் அடிமரம் பலகைகளாக அறுக்கப்பட்டு பல வேலை களுக்கு உதவுகிறது, இம்மரத்தாலாய சாமான்களை செல்லரிக் காது, இம்மரத்தின் ஒவ்வொரு பாகமும் பிரயோசனமுள்ள தென்றே சொல்லலாம்.

கறிவேப்பிலையும்,நிலவேம்பும்,வேம்பு இனத்தைச் சேர்ந்த வையென்பது அவைகளுக்கு ஏற்பட்டபேராலேயே அறியக்கிட க்கின்றது. இவைகளின் உபயோகம் எல்லோருக்குந்தெரிந்ததே.

'ஜ'

இருமல் ரோகம்

(202-ம் பக்கம் தொடர்ச்சி)

மையும் பரவுகின்ற பித்தசெய்கைகளும், மத்தசந்நி=உன்மாதசந்நியும், பித்தவலி அறும்=பித்தத்தாலுண்டாகிற சரீர நோக்காடுகளும் நீங்கும்; பிருந்தத்தின் அமுதில் அயில்=துளசியின் சாற்றிலநுபானித்துச் சாப்பிட்டால், பிரமை அதிசாரம்=புத்திசாபலமும், அதனோடு கூடிய அதிசாரரோகமும், பிளவை வலி=கட்டிகளின் வலிப்பும், குன்மவலி=வலிகுன்மமும், பின்னம் நலி=சரீரத்தை இளைப்பிக்கின்ற உளைமாந்தை ரோகமும், க்ஷயரோகமும், அறும்=நீங்கும்; பிரமியிலை அமுதில்உண்ணில்=பிரமியிலைச்சாற்றில் அநுபானித்துச் சாப்பிட்டால், பிச்சு எரிகழிச்சல்=பித்தத்தால்எரிச்சலோடுகூடிய பேதியும், பிண்டநலி=கருப்பையின் நோயும், சுகசந்நி=சுகசந்நியும், பிறைகாய்ச்சல்=பதினைந்து நாட்கொருமுறையாக மாறிமாறி வருகின்ற முறைச்சுரமும், அறும்=நீங்கும், பிரண்டைரசம் அதனில்அயில்=பிரண்டையை வதக்கிப்பிழிந்த சாற்றில் அநுபானித்துச் சாப்பிட்டால், பிரியாத வாதபித்த கபம்=ஒன்றைவிட்டொன்று பிரியாத வாயு, பித்த, சீதளங்களின், சஞ்சிதம்=சேர்க்கையினையுடைய, க=சரீரத்தின் கணுண்டாகின்ற, பித்தசநி அறும்=பித்தமாகிய சநி நீங்கும். பிப்பிலி ரசத்தில் உண்ண=பச்சைத்திப்பிலிச் சாற்றிலாவது திப்பிலிக் கஷாயத்திலாவது அநுபானித்துச் சாப்பிட்டால், பிற்றை முறைக்காய்ச்சல்=ஒருநாள் விட்டுவரும் முறைக்காய்ச்சலும், பிரசாபதிக்கடுகன் = ஆண்குறியிலுண்டாகும் ரணரோகங்களும், பிஞ்சுநலிவினை=குழந்தைகள் வருந்தும்படி செய்கின்ற கபரோகங்களும், போம்=நீங்கும்; பித்திகைரசத்தில் உண்ண=இஞ்சிச் சாற்றில் அநுபானித்துச் சாப்பிட்டால், பித்திகை என்ன செய்=சுவரைப்போல் தம்பிக்கச்செய்கின்ற, பித்தை உறு=பித்த சம்பந்தமான, சிக்கவலி=குறுக்காக வலிக்கின்ற வலியும், பில்லி=பேய் பிடித்தல், முதல் அறும்=முதலியவைகளும் நீங்கும், பிலத்து உருசி நெய்யில் உண்ண=மிக்க ருசியுள்ள பசுநெய்யில் அநுபானித்துச் சாப்பிட்டால், பிறங்குகப அனல்போம்=வெளிப்பட்டு வருத்துகின்ற கபோஷ்ணமானது நீங்கும். (ஆகையால், இம்மருந்தைச் சாப்பிட்ட காலத்தில்,) பிரமபத்திரி

யோடு=புகையிலையும், இளம்பிடியும்=பெண்போகமும், வர்ச்சிதமே=நீக்கப்படவேண்டி யவைகளாம்.

பிரதானிநட்பாம் என்றதற்கு இப்பவழபற்பம் சேனைத் தலைவனாகிய சிலேஷ்மத்துக்கு சிநேகமுள்ளதாம் என உரைத்ததென்னை? சினேகமாயின் அந்நோயுடன் கலந்துகொண்டு அந்நோயைப்பெருக்கிஅந்நோயாளியை வருத்துமென்றன்றோ? உரைத்தல் வேண்டும். நூலாசிரியர் தவறிக்கூறியிருக்க அதற்கு அத்தவறாகவே நீரும் பொருள் உரைத்தீரேயெனின்? நூலாசிரியர் கூறியதும், நாம் உரை கூறியதும் தவறேயாகா, சினேகமே யென்க. எங்ஙனமெனின், இப்பவழபற்பமானது சிலேஷ்மநோய்க்கு உத்தம சினேகனாயிருந்து அச்சீதளமிகுந்து நோயாளியை வருத்துங் காலத்து அதனை மிகவொட்டாது அடக்குதலின் என்க. அவ்வாறியற்றல் சினேகனுக்கே உரியகடனென்க. பகைவனுக்குரிய தொழிலன்றென்க இதனை;

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற் சென்றிடித்தற் பொருட்டும்"

எனுந் தெய்வப்புலவர் திருவாக்கானுணர்க.

சீதளத்தை சேனாதிபதி என்றதென் கொண்டெனின், வாதத்தை, அரசனெனவும், பித்தத்தை மந்திரி எனவும், சீதளத்தை சேனாதிபதி எனவும் கூறுதல் இந்நூலாசிரியர் வழக்காதலின் என்றறிக.

இவ்வாசிரியர்க்கு ஒரு பல அளவு சரக்குகளே எந்நூலின் கண்ணும் சொல்லுதல் வழக்காதலின் முப்பத்தி என்றதற்கு, மூன்றுபங்கு எனக்கொண்டு முப்பலம் எனக்கொள்ளாமல் மூன்று ரூபா எடை எனக்கொண்டு பலத்தின் மேலேற்றிறும்.

(இன்னும் வரும்)

மா. வடிவேலு முதலியார்.

சோதிட கலாநிதி

(200-ம் பக்கம் தொடர்ச்சி)

என கூர்மபுராணம் பிரகிருதோற்ற முரைத்தவத்தியாயம் கூறுமாற்றால், எல்லாம் வல்ல இறைவன் சிருஷ்டித்தொழில் செய்யும்போது பிரம்மா என்றும், காத்தற்றொழில் செய்யும் போது விஷ்ணுவென்றும் சம்மாரத்தொழில் செய்யும்போது சிவன் என்றும் அழைக்கப்படுகின்றார். இவ்வுண்மையை வலியுறுத்தவே;

ஒருருவாயினை மானுங் காரத்
தீரியல் பாயொருவின் முதல்பூதல
மொன்றிய விரிசுடரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்தியாயினை.

என அருமெறித் தமிழ்வேதத்திற் பாலருவாயரும், திருவாய் மலர்ந்தருளினார். மற்றும் **"சிவனேனும் பெயரே விண்டுச் சிறந்திடுமேரியே நம்பர், புவனியிற் பேதமாகப் புகல்வதுமாயை யந்தத்து"** என மச்சபுராணமுங் கூறுநிற்குமாகலின், அப்பிரம்ம, விஷ்ணு, ருத்திராதிகள் சிருஷ்டிஸ்திதி சம்மாரங்கட்கு அதிகாரிகளானார்கள்.

உருத்திரஹிருதயோப நிஷத்தில்

கார்யம் விஷ்ணுः க்ரியா ப்ரஹ்மா, காரணந்து மஹேஸ்வரः, ப்ரயோஜநார்தம் ருத்ரேண மூர்திரே காத்ரியாஸ்திதா. எனவும்,

பாத்மபுராணத்தில்

ஸ்ருஷ்டௌவிதாத்ரு ரூபஸ்த்வம், பாலநேஸ்வப்ரபாமயः
ப்ரளயே ஜகதஸ்ஸா க்ஷா, தஹம்ஸர்வாக்யதாங்கதः

எனவுங் கூறப்படுதலுங் காண்க.

உலந்தவிப் புவனமெல்லா முருப்பெறவ குப்பானெண்ணி
நலங்கெழு புனலுண்டாக்கி நண்ணுவீரி யத்தைவிட்டார்
கலங்கலில் பரமாய்மிக்க காஞ்சன வடிவமாகித்
துலங்குமண்டமதா யாண்டோ ராயிரந்தொலைந்த பின்னர்
இலங்கு சொன்னரூபமாகி யிருள்வளைந்த கூடமா
யலங்கலின்றி நின்றவண்ட மளவைகாண வுள்ளுளாய்த்
துலங்கி * விண்டுவாய் வயங்குசூரியச் சொரூபமாய்
நலங்கொளாதி யாகையாலா திததனென்னு நாமமாய்

என மச்சபுராணம் பிரமாண்டபேத வத்தியாயங் கூறுமாற்றால், அவர்களில் பிரம்மா முதல்முதல் ஜலத்தைச் சிருஷ்டிசெய்து, அதிற்றனது வீரியத்தை விட்டார்; அதாவது சக்தி விசேடத்தை விட்டார். அச்சக்தி விசேடம் உள்ளினும் வெ

---

* **"மேதததவிபுவாமாற்றல் விண்டு வேன்றுரைப்பர்யாதோ"** **என கூர்மபுராணங் கூறுமாற்றால் மகேச்சுரர், ஆதிபரமன், முதுக்குறைவினன், அயன், விண்டு எனப்பெயர் பெறுவர் என்றுணர்க.**

ளியினுங்கூட, அதிக இருளான சுவர்ணுண்டமாக ஏற்பட்டது. அதுவே பிராணிகளுடைய திருக்கோசரமான சராசர பிரபஞ்சத்திற்கு ஆதாரமானது, அதனால் பிரமாவிற்கு இரணியகருப்பன் என்ற பெயர் உண்டாயின.

ஸோஹங் காரஜ்ஜகத் ஸ்ருஷ்ட்யை, ப்ரஹ்மாண்ட மஸ்ருஜத்ப்ரபுః
தஸ்மைவே தான்வரான் தத்வா, ஸர்வலோக பிதாமஹம்
ப்ரதிஷ்டாப் யண்டமத்யேத, ஸ்வயம் ஸர்யேதி பாஸயன்
அதஸ்ருஷ்ட்யேம நஸ்சக்ரே, ப்ரஹ்மாஹங்கார மூர்த்தித்ருக்
மநஸஸ்சந்த்ர மாஜஜ்ஞே, சூர்யோக்ஷ்ணஸ்தே ஜஸாம்நிதிః

என்று சூரிய சித்தாந்தம் உபநிஷத்தத்தியாயமும் கூறுமாற்றால், அப்பிரம்மாசிருஷ்டி செய்யத்தொடங்கி, முதலில் ஆதிசபளப் பிரம்மத்தைத் தியானித்து,நன்மனதுடன் அவ்வண்டத்தைப் பார்த்தனர், உடனே அப்பரமாத்மாவாகும் காமேசுவரனே, இரணிய கருப்பனுடைய * கண்ணிலிருந்து சூரியனை அபிவியக்தனுனர். அம்மகாமாயை யாகும் லலிதா பரதேவதையே இரணிய கருப்பனுடைய மனதிலிருந்து சந்திரனை அபிவியக்தனுனர். ஆகலின் "**சந்த்ரமாம நஸோஜாதః சக்ஷோஸ் சூர்யோ அஜாயத**" என சுருதியுங் கூறுநிற்கும். இவ்வுண்மைப் பற்றியே சோதிடநூலில் ஆத்தும நேத்திரகாரகன் சூரியன் எனவும், இருதய காரகன் சந்திரன் எனவும் வகுத்துளது. "**ஆத்மார்கஸ் சந்த்ரமாஸ சித்த**" என கேசவதைவக்ஞரும், இங்ஙனமே வராகமிகிரரும், ஏனையபூர்வாசார்யர்களுங் கூறியிருப்பதூஉங் காண்க. இன்னும் "**இரவிசங்கரன் ஈஸ்வரிதிங்கள்**" என உள்ளமுடையானினும் பரமேஸ்வரனே சூரியனுகவும், பரமேஸ்வரியே சந்திரனுகவும் கூறப்பட்டிருக்கின்றன. "**ஹராஸ்மாரஹரோபர்கா**" என வடமொழி நிகண்டும் "**பதேஷுருத்ரோபர்கம்**" (**இந்த ருத்திரர்பர்க்கர்**) என மைத்திராயண வுபநிடதமும் கூறி, சூரியனை "**நீலக்ரீ வோவிலோகித**" (**நீலகண்டமும் சேந்நிறமுடையார்**) எனதைத்திரிய வுபநிடதமும், "**த்ரிநேத்ரோ ரவி**" (**முக்கட் சூரியன்**) என அபியுக்தரும் வருணித்திருத்தலும், சூரிய மண்டலத்தில் வசிக்கின்றவர் சிவபெருமானே என்பது விளங்காநிற்கும். எசுர்வேத வாஜஸ்நேய சம்மிதையில் ஈசாவாஸ்யோபநிஷத்து 16-ம் வாக்கியத்தினிறுதியில் வசிக்கிறவனெவனே அப்புருடன் என்னுளிருக்கின்றுன்" என கூறியிருத்தலுங்காண்க.

(இன்னும் வரும்)

வித்வான்-வ. கு. வேலுநாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி.

---

* வாதுளாகம முதலிய நூற்களில் மகேசுவர மூர்த்தியின் இரு கண்களினின்று சூரிய சந்திரர்கள் பிறந்ததாக கூறப்பட்டிருக்கின்றன.

குடித்தன நூல்

வீடு.

வாயு மண்டலத்தின் சீதோஷ்ணத்தால் உபத்திரவமில்லா திருக்கும் பொருட்டு நம்முடைய சரீரத்திற்கு மூன்று உறைகள் ஏற்பட்டிருக்கின்றன; முதல் உறை தோல்; இரண்டாவது உறை உடை; மூன்றாவது உறை வீடு. தோலும் உடையும் நமது சரீரத்தை மூடி எங்ஙனம் ஆதரிக்கின்றனவோ, அங்ஙனமே வீடும் நம்மை ஆதரிக்கின்றது. ஆனால் வீடு ஒரு விசாலமான உறை; அது, மழை, பனி, குளிர், காற்று, வெயில் இவைகளால் உண்டாகக்கூடிய தொந்தரவுகளை நீக்கும்.

வாஸஸ்தானம் எவ்விடத்தில் எவ்விதமாக அமைதல் நன்று என்பதைப் பற்றி நமது முன்னோர்கள் நன்றாகயோசித்து ஒரு சாஸ்திரம் செய்திருக்கிறார்கள். பெரும்பாலும் அந்த சாஸ்திரத்தைத் தழுவியே வீடுகள் இன்னும் கட்டப்பட்டு வருகின்றன. அதிலுள்ள அநேக பாகங்களை இப்போது நாம் மறந்திருந்த போதிலும், பழைய வழக்கங்கள் சிதறி, மறைந்து போகாவண்ணம், அவற்றை ஆதரித்துக்கொண்டு வரும் இயற்கையுடைய நமது ஸ்திரீகள் அந்த சாஸ்திரத்திலுள்ள முக்கியமான விதிகளை நன்கு அறிவார்கள் அவர்கள் வீட்டின் குற்றங்களைச் சுலபமாகக் கண்டு பிடித்துச் சொல்வார்கள். சுகமான வீட்டின் சில பொது லக்ஷணங்களை இங்கு கூறுவோம்.

1. வீடானது தெற்கு நோக்கி இருத்தல் வேண்டும். வடக்குபார்த்த மச்சு வீட்டைக் காட்டிலும். தெற்குபார்த்த குச்சு வீடு மேல் என்று நமது ஸ்திரீகள் சொல்லுவார்கள். இஃதுண்மையே. வடக்குபார்த்த வீடு கோடையிலும் சுகமில்லை,குளிர்காலத்திலும் சுகமில்லை. கோடையில் வீட்டின் முன்பாகத்தில் வெயில் உபத்திரவம்; தென்றல் கிடையாது; அது தெற்கு பார்த்த வீடு நோக்கி வீசும். ஆகையால் வடக்கு பார்த்த வீட்டிற்கு கோடையில் மிகவும் உஷ்ணம். குளிர் காலத்தில் வடக்கு பார்த்த வீட்டிற்கு வெயில்கிடையாது. வாடைவீசும் குளிர் அதிகம்.

2. அநேகமாய் இரண்டு கட்டு வீடுதான் சிலாக்கியம். முன்பாகத்தில் இரண்டு திண்ணைகள், தாழ்வாரங்கள், முற்றம், இரண்டு அறைகள்; பின்கட்டில் சமையல் அறை, முற்றம், கிணறு, தோட்டம்.

3. வீடு மிகப் பெரிதாகவும், மிகச் சிறிதாகவும் இருத்தல் கூடாது. மனை நூலில் சொல்லப்பட்ட அளவுபோல் வீடு அமைதல் நன்று.

4. குடி நீர்ப்பிரதேசங்களாகிய நதி, அல்லது, குளம் அல்லது கிணறு இவற்றுக்குக் கூடியவரையில் அருகில் வாஸஸ்தானம் இருக்கவேண்டும்.

5. வீடு தெருக்கோடியில் இருத்தல் கூடாது. அநேகமாய் மத்தியிலிருக்க வேண்டும்.

மேலே சொன்ன விதிகளைத் தவிர பின் வரும் விஷயங்களையும் கவனித்தல் வேண்டும்.

வாஸஸ்தானம் சதுப்பு நிலத்தில் அமைதல் கூடாது. அது மிகவும் காய்ந்திருக்க வேண்டும். அதன் சமீபத்தில் அழுகிப் போன குட்டைகள், சதுப்பு நிலங்கள் முதலியன இருத்தல் கூடாது. அவை யிருந்தால் முறைக்காய்ச்சல், நரம்பு வலி முதலிய நோய்கள் உற்பத்தியாம்; குப்பைத்தொட்டி, சுடுகாடு, கல்லறை இவற்றுக்குச் சமீபத்திலே வசித்தலும் கெடுதியாம். அங்கே அஸ்திஜ்வரம், விஷபேதி இவற்றின் கிருமிகள் ஏராளமாக விருத்தியாகிக் கொண் டிருக்கும்.

வெளி நிலத்தைவிட வீட்டின் தரை உயர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் வீடு மழைக்காலத்திலும் ஓதமில்லாதிருக்கும். தெருமட்டத்திலுள்ள வீட்டின் தரை சதா ஈரமாக இருக்கும். ஈரத்தரையில் நடமாடினால் அசௌக்கியம் உண்டாகும்.

ஒரு சிறு தோப்பினருகில் வீடு கட்டிக்கொண்டு வசித்தல் சுகமாம். நம்முடைய சுவாசத்தால் வெளிவரும் கரியமிலவாயு தாவரங்களுக்கு ஆகாரமல்லவா? ஆகையால் செடிகள் உள்ள இடங்களில் காற்று எப்போதும் பரிசுத்தமாகவே இருக்கும்; இதனாலே பட்டணங்களைவிட கிராமங்களே சுகமான வாஸஸ்தலங்கள் என்பது நன்றாக விளங்குகிறது. கிராமங்களிலே ஒவ்வொரு வீட்டிற்கும் ஒருதோட்டம் இருக்கும் தோட்டத்தில் தாவரங்கள் இருக்கும். பொதுவாக வேம்பு நமது சௌக்கியத்திற்கு அநுகூலமான மரமெனக் கருதப்படுகிறது. அநேகமாய் வேப்ப மரமில்லாத தோட்டம் இராது. புளியமரம் சுகமன்று ஆயினும் புளிக்காக அதனை வைத்திருக்கிறார்கள்.

வீட்டின் சுற்றுப் புறங்கள் சுத்தமாகவும், அழகாகவும்இருத்தல் வேண்டும்: தெருக்கள் நன்றாகப் பெருக்கப்பட்டு, சுத்தமாக இருத்தல் நன்று குப்பைகளைக் கிரமமாக எடுத்து விடும்படியான ஏற்பாடிருத்தல் மேல், இல்லா விட்டால் தெருவில் குப்பை கொட்டுதல் கூடாது. தெரு அசுத்தமானால் அத்தெருவிலுள்ள வீடுகளுக் கெல்லாம் கெடுதல் அல்லவா? தெருவில் கொட்டப்பட்ட, கூட்டப்பட்ட அசுத்தங்களைக் கிரமமாக எடுக்கும்படி செய்யாவிட்டால், கோழி அவற்றைத் தெரு முழுதும் பரப்பி, துர்நாற்ற மடிக்கும்படி செய்து விடும்.

பட்டணங்களில் வீட்டின் கழிவு நீரை ஜலதாரை வாயிலாகத் தெருவில் விடாதிருத்தல் ஒவ்வொரு வீட்டுக்காரனின் கடமையாகும். ஏனென்றால் ஒவ்வொரு வீட்டின் படுக்கை அறை அடுத்த வீட்டின் சாக்கடைக்கு அருகில் அமைந்திருக்கின்றது. அதனால் ஒவ்வொரு வீட்டுக்காரனும் ஜலதாரைக் கால்வாயைச்

சுத்தமாக வைத்திருப்பதுந் தவிர, எந்த முகாந்திரத்தைக்கொண்டும் அசுத்த நீரை வெளியே தெருவில் விடாதிருத்தல் ஊரின் க்ஷேமத்துக் குரியதாம். புதுச்சேரியில் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒருசாக்கடைக் கிணறு உண்டு அசுத்தமான, கழிவுநீர் அதில் போய் விழுந்து விடும்.

சில ஊர்களில் குப்பைத் தொட்டிகள் வைத்திருக்கிறார்கள். இஃதோர் நல்ல ஏற்பாடுதான் குப்பைத் தெரு முழுதும் அசுத்தமாகப் பரவாதல்லவா? ஆனால் அத்தொட்டிகள் நிரம்பு முன்னமே அவற்றிலுள்ள குப்பையை வாரி விட வேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் அவற்றால் அதிக துர்நாற்றம் உண்டாவதோடு, அவை ஒரு கொடியநோய் ஊற்றாகிவிடும்.

பொதுவாகப் பின்வரும் ஏழு குணங்களும் பொருந்திய வீடே சுகமாக வசிப்பதற்குத் தகுதியானது.

1. வீட்டின் தரை, சுவர் முதலிய பாகங்கள் ஓதமில்லா திருத்தல் வேண்டும்.

ஆகையால் கிராமங்களில் கொஞ்சம் உயரமான இடங்களிலே வீடுகள் அமைத்தல் நன்றாம். கட்டடத்திற்கு வேண்டிய வஸ்துக்களும் (செங்கல், சுண்ணாம்பு முதலியன) நன்றாக வெந்து, காய்ந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவை ஈரத்தை உட்கொண்டு உரைத்துப்போம். உளுத்துப்போன சுவரையுடைய வீடு அசௌக்கியத்திற்குக் காரணமாகும்.

பட்டணங்களிலே, புதிதாகக் கட்டப்பட்ட, நன்றாகக்காயாத, ஈரமான சுவர்களையுடைய வீடுகளுக்குக் குடிபோதல் கூடாது, வாடகை கொஞ்சம் மிகுதியாயிருந்தாலும், அதை லக்ஷியம் பண்ணாமல் நல்லவீடுகளிலே வசித்தல் நலமாம்; வாடகையில் மிச்சம் பிடித்த பணம் வட்டியோடு வைத்தியனிடம் செல்லும். நோயின் உபத்திரவம் இலாபம். எவ்வளவு நஷ்டம்! என்ன கஷ்டம்! பாருங்கள்.

2. வீட்டிலே சூரியன் தாராளமாகப் பிரவேசித்தல் வேண்டும்.

சூரியன் நோய்க்கிருமிகளை ஒழிப்பதில் சமர்த்தன்; அவன் பிரதிதினமும் நம்முடைய நன்மைக்காகவே காய்கிறான்; கூடுமானவரையில் வீட்டின் ஸகல பாகங்களிலேயும் எவ்வளவுக்குச் சூரியன் நடமாடுகிறானோ, அவ்வளவுக்குச் சௌக்கியமாம்; சூரியன் நுழையாதவீட்டில், வைத்தியன் அடிக்கடி நுழைவான்.

3. வீட்டுக்குள்ளே காற்று தாராளமாக நடமாடும் பொருட்டு விசாலமான ஜன்னல்களை அமைத்தல் வேண்டும்;

ஒரு வீட்டிற்கு எத்தனை துவாரங்கள் அமைக்க முடியுமோ அத்தனையும் அமைத்தல் நன்று; ஒரே வாயிலுடைய வீட்டில் காற்றோட்டமிராது; ஆகையால் வீட்டினுடைய அறைகளுக்குக்

கூடுமானால் நான்கு புறமும், குறைந்தது இரண்டு புறமாயினும் ஜன்னல்கள் இருக்கவேண்டும்; நம்முடைய தேசத்திலே, ஒரே வீட்டில் அநேக குடும்பங்கள் இருண்ட நெருக்கமான, ஜன்னல்களில்லாத அறைகளிலே வசிக்கின்றன; அக்குடும்பங்களின் சௌக்கியத்தைப் பற்றிக் கேட்பானேன்? சதா நோயுள்ள தம்பதிகளும், பலஹீனமான குழந்தைகளுமேகாணப்படுகிறார்கள்.

4. வீட்டின் அறைகள் கூடிய வரையில் விசாலமாக இருத்தல் சுகமாம்.

அப்போது தான் அதனுள் வசிப்பவர்களுக்குப் போதுமான காற்று கிடைக்கும்; அறை சிறிதாகவும், அதில் வசிப்பவர்களின் தொகை பெரிதாகவும் இருந்தால், மூச்சடைப்பு முதலிய அசௌக்கியங்கள் ஏற்படும். ஒரேவீட்டில் அநேக குடும்பங்கள் வசித்தலுங் கூடாது, ஒருவீட்டில் வசிக்கக்கூடிய ஜனத்தொகைக்கு ஒரு வரையறை உண்டு. ஒரேவீட்டில் அநேக குடும்பங்கள் நெருக்கமாகக் குடியிருந்தால்,அங்கே மரணத்தொகை அதிகமாகும்; ஐயோ! எத்தனையோ குடும்பங்கள், தம்முடைய வீட்டிலுள்ள விசாலமான அறைகளை விட்டு விட்டு நெருக்கமான அறைகளையே படுக்கை அறைகளாக உபயோகிக்கிறார்களே! என்ன அறிவீனம்! விசாலமான அறைகளைக் கௌரவத்திற்காக வைத்திருக்கிறார்கள் போலும் குடிகாரத் தொழிலாளி, தான் சம்பாதிப்பதில் முக்காற்பங்கைச் சாராயக் கடைகளிலே தொலைத்து விட்டு, தான் பெண்சாதி பிள்ளைகளோடு அசுத்தமான தெருக்களிலே, நெருக்கமான குடிசைகளில் வசிக்கின்றானே என்ன பரிதாபம் காற்றும் வெளிச்சமுமில்லாத குடிசைகளில், நோயால் வருந்திகிடக்கும் குடும்பங்கள், வறுமையினால் நசித்து, சாராயக்கடைகளும், சூதுக்கடைகளும் சிறப்பான அலங்காரங்களுடன் ஓங்குகின்றனவே!

5. பட்டணங்களில் மெத்தைகள்மீது வசித்தல்வேண்டும்.

எவ்வளவு உயரத்தில் வசிக்கிறோமோ, அவ்வளவு சௌக்கியமாம்; ஏனென்றால், அங்கே சூரிய கிரணங்கள் அடுத்தவீடுகளால் தடை படாமல் அதிகநேரம் காணப்படும்; மேலும் சுவாசிக்கும் காற்றில் தூசிகள் இரா கீழே வசிப்பவர்கள் தெருக்களினின்று கிளம்பும்தூசி நிறைந்த காற்றைத்தான் சுவாசிக்கும்படி நேரிடும். கக்கூஸ், குப்பைத் தோட்டி, ஜலதாரை முதலியவை பிரத்தியேகமா யிருத்தல் வேண்டும்.

6. நாம் வசிக்கும் அறைகளுக்குச் சமீபத்தில் கக்கூஸ்கள் இருத்தல் கூடாது.

அவற்றிலிருந்து துர்நாற்றம் உண்டாவதுந் தவிர, அவை அநேக நோய்களுக்கு ஆதாரமாகின்றன இது விஷயத்தில் கிராமவாசம் மிகவும் சௌக்கியமாம்;

N. சுப்ரமணி அய்யர்.